மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) (இ) இத் திட்டம் வருவாய் வாரியத்தின் (உணவு உற்பத்தி) பரிசீலனை யிலுள்ளது.

திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி : இதை சற்று துரிதப்படுத்தி, சீக்கிரமாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தத் திட்டத்தின் மதிப்பீடு 1,37,000. அதுபற்றி ரெவின்யூ போர்டு பரிசீலனை செய்து வருகிறது. அறிக்கை வந்ததும் நடவடிக்கை எடுக்கப்படும்.

வாகனவரி வசூல்

* 136 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், திருவத்திபுரம் அருகில் செய் யாற்றின் மேல் கட்டப்பட்டுள்ள பாலத்தைக் கடக்கும் வண்டிகளுக்கு எத்தனை ஆண்டுகளாக வாகன வரி வசூலிக்கப்படுகிறது ?

(இ) அது எப்போது முதல் நிறுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) 1962-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் வாகன வரி வசூலிக்கப்படுகிறது.

(இ) பாலம் கட்டுவதற்குச் செலவான தொகையான 14.40 லட்சம் ரூபாயும் அதன்மீதான வட்டியும் திரும்பக் கிடைக்கும் வரை வாகன வரி வசூலிக்கப்படும்.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இந்த வரி வசூலிக்கப் படுவது பற்றி பொதுமக்கள் மன சஞ்சலம் அடைந்திருக்கிறார்கள். சுமார் 10 ஆண்டுகளுக்குமேல் இந்த வரி வசூலிக்கப்பட்டு வருகிறது. ஆகவே, அந்த வட்டி வீதத்தைத் தள்ளுபடி செய்து, கணக்கை ஒழுங்குபடுத்தி, அந்த வரி வசூலிப்பை அரசாங்கம் ரத்து செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த வாகன வரி வசூலிப்பதில் தள்ளுபடி செய்வதற்கு எந்தவிதமான நியாயமும் இல்லை. அரசாங்கம் 14 லட்சம் ரூபாய் செலவிட்டிருக்கிறது. திட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு, இதுவரை இரண்டே முக்கால் லட்சம் ரூபாய் கூட வசூலிக்கப்படவில்லை.

1972 ஆகஸ்ட் 17]

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, இப்போது வாகன வரியாக தினம் ஒரு ரூபாய் வசூலிக்கப்படுகிறது. அடிக்கடி—அன்றாடம் அந்த வழியாகப் போய்க்கொண்டிருக்கும் வாகனங்களுக்கு சலுகை அளிக்கும் வகையில் "சீசன் டிக்கட்"—குறைந்த கட்டணம் வசூலித்தல்—வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அப்படி ஒரு திட்டம் இல்லை. ஏலம் விடப்படுகிறது. ஏலம் எடுப்பவர்கள் வாகன வரி வசூலிக்கிறார்கள்.

Widening of road in Thiruvettar.

* 137 Q.—Thiru J. JAMES : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there was a proposal for the widening of the road on either side of the bridge across the river at Thiruvettar in Kanyakumari district; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, இந்த ரோட்டின் இரு பக்கமும் ஏகதேசம் 100 அடி ஆழமாக இருக்கிறது. பல தடவைகள் இந்த ரோட்டில் போகும் லாரிகளும், பஸ்களும் கவிழ்ந்து, உயிர் சேதம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்த ரோட்டை அகலப்படுத்த தேவையான நடவடிக்கையை அரசாங்கம் உடனடியாக எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த சாலையை அகலப்படுத்தவும், அந்த பாலத்தைப் புதுப்பிக்கவும் சுமார் 7 லட்சம் ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நிதி வசதியைப் பொறுத்து நடவடிக்கை எடுக்கப்படும்.